புத்தகம் - 2 அத்தியாயம் - 1

அது ஒரு காலைப் பொழுது. வார தினம் ஆதலால் காலை வேளையில் மிகவும் பரபரப்பாக அருணின் அம்மா பம்பரம் போல செயல் பட்டுக்கொண்டிருந்தார். தந்தை ரமேக்ஷும் கீதாவிற்கு தேவையான ஒத்தாசையை செய்து கொண்டிருந்தார்.

‘என்னங்க, அருண் எழுந்துட்டானா? Schoolலுக்கு நேரமாச்சு.''

''அவன் குளிக்கிற சத்தம் கேட்டதே. வந்திருவான். Schoolலுக்கு இன்னும் நேரமிருக்கு.''

ரமேக்ஷ் சொன்னதை சட்டை செய்யாமல், ''அருண்! அருண்! நேரமாச்சு வா,'' என்று ஒரு கத்து கத்தினார்.

ரமேக்ஷ் காதை பொத்திக்கொண்டு, ''இப்படி கத்தனுமா? கொஞ்சம் மெதுவா பக்கத்துல போய் பேசேன்,' என்றார்.

''கத்தினா தான் நீங்க எல்லோரும் கவனிக்கறீங்க. என்ன பன்ன்றது? அருண்! அருண்!''

''அம்மாவும் பையனும் என்னவும் பண்ணிக்கீங்க. என்னை விட்டுறங்க,'' என்று சொல்லிவிட்டு, NewsPaperயை எடுத்துப் படிக்க உட்கார்ந்தார். அவருக்கு காலையில் Crossword போடுவது ரொம்பவும் பிடிக்கும். அவர் Dining Table அருகில் அமர்ந்த்தும் அவர் கால் அடியில் பக்கரூ வந்து படுத்துக்கொண்டான். அவர் அவனை செல்லமாக, கீழே குனிந்து தடவிக் கொடுத்தார்.

''அப்பா, குட் மார்னிங்.''

குரல் கேட்டு திரும்பினார். அருண், குளித்துவிட்டு Schoolக்கு போக தயாராக நின்றான்.

''குட் மார்னிங், கண்ணா. போய் Breakfast எடுத்துக்க.''

''Crossword போடறீங்களா, அப்பா?''

''ஆமாம், கண்ணா. வா, நாம சேர்ந்து போடலாம்.''

அருண் சமையல் அறைக்குள் சென்று படபடவென்று சீரீயலை ஒரு Bowlலில் போட்டுக்கொண்டு வந்து, அப்பாவின் அருகே உட்கார்ந்தான்.

''உட்கார்ந்துதீட்டங்களா ரெண்டு பேரும்,'' என்று சொல்லிக்கொண்டே கீதா வந்தார். ''இன்னிக்கும் அதே சீரீயலா? Bread எடுத்துக்கோ அருண். எப்போதும் ஒரே சாப்பாடு வேண்டாம்.''

''நாளைக்கு அம்மா, ப்ளீஸ்,'' என்றான்.

''கீதா சற்றே எரிச்சலுடன் ஒன்றும் சொல்லாமல் சமையல் அறைக்குள் சென்றார்.

அம்மா உள்ளே போனவுடன், ''என்ன clue அப்பா?'' என்று, சீரீயலை மென்று கொண்டே கேட்டான்.

''English Word. 11 Letters. Accidental Find,'' என்று சொன்னார்.

''ம்ம்ம்...Accidental Find? அப்படினா?''

''அப்படினா, எதையோ கண்டுபிடிக்கப் போய், வேறு எதையோ ஒன்றை கண்டு பிடிப்பது.''

"ம்ம்ம்...11 letters. அப்பா, உங்களுக்கு தெரியுமா?''

''Yes. தெரியும்.''

''கொஞ்சம் உதவி பன்றீங்களா?''

''S எழுத்து ஆரம்பம். Y எழுத்து முடிவு.''

''SANCTITY?'' என்று கேட்டான், அருண்.

''11 letters. ஞாபகம் இருக்கட்டும்,'' என்றார்.

''அம்மாவிற்கு தெரியுமா?'' என்று கேட்டான், அருண்.

''தெரியாதுன்னு நினைக்கிறேன்,'' என்று சற்று சத்தமாக, கீதா காதில்

விழும்படி கிண்டலுக்கு சொன்னார்.

''ரமேஷ்ஷ எதிர்பார்த்து போல் கீதா வந்து, ''என்னது? எனக்குத் தெரியாதா? எங்கே கேளுங்க பார்ப்போம்?'' என்று பதில் கொடுத்தார். ''அம்மாவுக்கு எல்லாம் தெரியும்.''

''அம்மா, அப்படி உங்களுக்கு இந்த clue தெரியலேன்னா?'' என்று அருண் கேட்டான்.

''தெரியலேன்னா அப்பாவும் பையனும் lunch and dinner நீங்களே பார்த்துக்க வேண்டியது தான்,'' என்று சிரித்துக்கொண்டே கீதா சொன்னார்.

''11 letters. Accidental Find. கண்டு பிடிங்க அம்மா.''

''11 letters. Accidental Find? 11 letters Accidental Find...'' என்று பல முறை தனக்குள்ளேயே சொல்லிப்பார்த்தார். கை விரல்களை முனுமுனுத்துக்கொண்டே எண்ணிப் பார்த்தார்.

''அருண் அப்பாவைப் பார்த்து ஒரு நமட்டு சிரிப்பு சரித்தான். அவரும் சிரிப்பை அடக்கிக் கொண்டார்.

''SERENDIPITY.'' சட்டென்று பதில் கொடுத்தார் கீதா. ''11 letters. Accidental Find. That must be it!'' என்றார்.

''அப்பா, அம்மா சொன்னது சரியா?'' என்று கேட்டான் அருண்.

''அதென்ன, 'அப்பா சரியா?' அம்மா என்றைக்கும் கரைக்ட் தான்,'' என்று புன்சிரிப்போடு கீதா சொன்னார்.

ரமேஷும், ''அருண், அம்மா சொன்னது கரைக்ட்,'' என்றார்.

''WOW! அம்மா, நீங்க அற்புதம் அம்மா. நீங்க அற்புதம்.''

''ஆமாம் கண்ணா, என்னைக்கமே நான் அற்புதம் தான். இன்னும் அஞ்சு நிமிஷத்துல நீ பள்ளிக்கூடம் கிளம்பனும். டைம் ஆச்சு.''

''அம்மா, SERENDITY-க்கு உதாரணம் ஒன்னு கொடுங்களேன்.''

கீதா சற்று யோசித்து விட்டு, ''நான் அருணின் Socks தேடும்போது அவன் ஒளித்து வைத்திருந்த ஹலோவீன் மிட்டாய்களைப் பார்த்தேன்,'' என்று சொல்லி சிரித்தார்.

அருண் அம்மா சொன்னதைக் கேட்டு விட்டு ஒரு அசட்டு முழி முழித்தான்.

அப்பா ரமேஷும் அம்மாவோடு சேர்ந்து கொண்டார். அருண் தப்பித்தோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓடினான்.

அருணுக்கு அன்று அம்மா சொன்ன அர்த்தம் புரிந்த்தோ என்னவோ தெரியவில்லை, ஆனால், அவனது வாழ்க்கையிலும் ஒரு Serendipitious சம்பவம் ஒன்று நடக்க உள்ளதை அவனுக்கோ, அவனது பெற்றோர்களுக்கோ அப்பொழுது தெரியாது.